செய்தி வெளியீடு எண்: 260 நாள்: 27.05.2009

செய்தி வெளியீடு— 27.5.2009

## பள்ளி கல்லூரி விடுதிகளில் சேரும் சிறுபான்மை இஸ்லாமிய மாணவியரின் குடும்ப வருமான வரம்பு 50 ஆயிரம் ரூபாய் என்பது 1 இலட்சம் ரூபாயாக உயர்வு !

## முதலமைச்சர் கலைஞர் ஆணை!

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயிலும் சிறுபான்மை இஸ்லாமிய மாணவியர்கள் தங்கிப் படிப்பதற்காக இந்த அரசு கடந்த ஆண்டில் திருநெல்வேலி, திண்டுக்கல், திருச்சி, கோவை, வேலூர் ஆகிய இடங்களில் புதிதாக ஐந்து மாணவியர் விடுதிகளைத் தொடங்கியுள்ளது. இந்த விடுதிகளில் சேருவதற்கான சிறுபான்மை இஸ்லாமிய மாணவியரின் பெற்றோர் ஆண்டு வருமான வரம்பு 50 ஆயிரம் ரூபாய் என்பதை ஒரு இலட்சம் ரூபாயாக உயர்த்தி முதலமைச்சர் கலைஞர் இன்று (27.5.2009) ஆணையிட்டுள்ளார். இந்த ஆணையின் காரணமாக ஆண்டுக்கு ஒரு இலட்சம் ரூபாய் வரை குடும்ப வருமானம் கொண்ட ஏழை இஸ்லாமிய சிறுபான்மைச் சமுதாயத்தைச் சார்ந்த மாணவியர் பெரிதும் பயனடைவர்.

*****

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9.